ISBN 978-93-5288-634-0

# பாரதியும் பெண்மையும்



முனைவர்.ம.கீதா
உதவிப்பேராசிரியர் - தமிழ்த்துறை
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும்
மகளிர் உயர்கல்வி நிறுவனம்,
கோயம்புத்தூர் - 641 043.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர் பாரதியார். அடிமைப்பட்டுக்கிடந்த இந்திய நாட்டின் விடுதலைக்காக வீறு கொண்டு எழுந்தவர். நாட்டையும் மொழியையும் இருகண்களாகப் போற்றியவர். தனது அனைத்துப்படைப்புகளிலும் புதுமையைக் கொண்டு வர வேண்டுமென்று விரும்பியவர் சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது, சொற்புதிது சோதிமிக்க நவ கவிதை எந்நாளும் அழியாத மகா கவிதை' என்று நெஞ்சில் கனல் மணக்கும் கவிதைகளுடன் நாட்டு மக்களிடத்தில் அறிமுகமானார். பாரதி வாழ்ந்த காலத்தில் நாடும் அடிமைப்பட்டிருந்தது. பெண்களும் அடிமைகளாக நடத்தப்பட்டு வந்தனர். அவர்களுக்கு கல்வியறிவு மறுக்கப்பட்டது வெறும் போகப் பொருட்களாகப் பயன்படுத்தப்பட்டனர். இதனைக் கண்டு வெகுண்ட பாரதி பெண்களுக்கு ஏற்றம் தரும் வகையில் தம் கவிதைகளின் வாயிலாக மக்களைத் தட்டி எழுப்பினார். அவர் வாழ்ந்த காலத்தில் பெண்களின் நிலை குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பெண்ணிற்குரிய குணங்கள்:**

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய நான்கும் பெண்களின் குணங்களாகச் சொல்லப்பட்டு வந்தன. ஆனால் நாணமும் அச்சமும் பெண்களுக்கு வேண்டும் என்று வற்புறுத்துவதை பாரதி அறவே வெறுக்கின்றார். இதனை,

"நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்

ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்"

என்று கூறி ஞானம் வேண்டும் நல்லறம் வேண்டும். வீரம் வேண்டும். சுதந்திரம் வேண்டும். இவைதான் நற்குடிப்பெண்ணின் குணங்கள் என்று ஆணித்தரமாகக் குறிப்பிடுகின்றார்.

**குடும்ப அமைப்பு முறை:**

குடும்பத்தில் மக்கள் இன்பமோடும், மகிழ்ச்சியோடும் வாழ்வதற்கு அடிப்படைத் தேவை வீடாகும். காணி நிலம் வேண்டும். பராசக்தி, காணி நிலம் வேண்டும் என்று பாடியதோடு நில்லாமல் நல்ல வீட்டுடன் கேணி நீரும், தென்னை மரங்களும் வாழ்க்கையை வளமாக்க அன்னையை வேண்டுகிறார். இல்லறத்தில் ஈடுபட்டு அறவழியில் நின்று, வாழ்ந்து பொருளீட்டி, இன்பம் துய்த்து வீடு பேறடைவதற்கு மனையே அடிப்படையாகும். ஒரு குடும்பத்தில் உறுப்பினராய் உள்ள ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கடமையுண்டு என்பதை,

 ISBN 978-93-5288-634-0

"ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே"

என்ற சங்க இலக்கியப் பாடல் குறிப்பிடுவது போல பாரதியும் இல்லத்தில் வாழும் கணவன் மனைவி, நன்மக்கள் கடமைகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். இதனை,

"ஒன்றைக் குடும்பந்தனிலே – பொருள்
ஓங்க வளர்ப்பவன் தந்தை
மற்றைக் கருமங்கள் செய்தே – மனை
வாழ்ந்திடச் செய்பவள் அன்னை
ஏவல்கள் செய்பவர் மக்கள் - இவர்
யாவரும் ஓர்குலம் அன்றோ? "

என்ற வரிகளின் மூலம் பொருள் ஈட்டுவது தந்தையின் கடமை என்றும், வருவாய்க்கு ஏற்ப செலவு செய்வது இல்லக்கிழத்தியின் கடமை என்றும், பெற்றோரின் ஏவல்படி நடப்பது பிள்ளைகளின் கடமை என்றும் கூறி ஒரே குலமான இவர்கள் அனைவரும் இணைந்து அவரவர் கடமைகளை ஒழுங்காகச் செய்வதால் வீடு வளர்கிறது என்று இல்வாழ்க்கையின் தத்துவத்தைப் படம் பிடித்துக்காட்டுகிறார்.

தாயின் மாண்பு:

தாயின் பெருமைகளை உலக மக்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும் என விரும்பினார். 'தாயிற் சிறந்த கோயிலுமில்லை, தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை' என்பது முன்னோர் வாக்கு. தாய்க்கு ஈடு இணை சொல்ல முடியாது. அத்தகைய தாய்க்குலத்தை அடிமைப்படுத்தினால் மக்களும் அடிமையாகிவிடுவர் என்று தாயின் பெருமையினைப் பற்றி,

"தாய்க்கு மேல் இங்கேயோர் தெய்வமுண்டோ
தாய் பெண்ணே யல்லளோ" என்றும்
"உண்டாக்கிப் பாலூட்டி வளர்த்த தாயை
உமையவளென் றறியீரோ" என்றும்

கூறுவதிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது.

பெண் கல்வி:

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அந்நாட்டு பெண்கல்வி மிகமிக இன்றியமையாதது என்பதை மிகவும் தெளிவாக உணர்த்துகின்றார். ஏனென்றால் அன்பாக, பண்பாக குழந்தைகளை வளர்க்கும் குடும்பச் சூழ்நிலையில் பெண் கல்வி மிக முக்கியத்துவம் பெறுகின்றது. சக்தி என்று தாய்மையை வழிபட்ட சமுதாயத்தில் பெண்ணை அடிமை செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனை

"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்
கண்கள் இரண்டினில் ஒன்றைக் குத்தி
காட்சி கெடுத்திட லாமோ
பெண்க ளறிவை வளர்த்தால் வையம்
பேதமை யற்றிடுங் காணீர்"

 ISBN 978-93-5288-634-0

என்ற பாடல் வரிகளின் மூலம் பெண்களுக்கு அறிவு ஞானம் இயற்கையிலேயே உண்டு என்றும் ஆனால் அது வளர்க்கப்படவில்லை என்றும் அதைக் கெடுத்தவர்களை மூடர் என்றும் கடுமையாகச் சாடுகின்றார்.

அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்றும் வெளிவிவகாரங்களில் அவர்களுக்கு என்ன வேலை என்றும் கணவனின் இன்பம், குழந்தைகளின் நலம் இவற்றைத்தான் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று கூறுகிற மக்களின் கொள்கையை தகர்த்தெறிய வேண்டும் என்பது பாரதியின் விருப்பம் என்பதை,

''ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டி வைப்போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்''

என்ற பாடல் மூலம் பெண் கல்வியின் முக்கியத்துவத்தைக் கூறி,

''மூத்த பொய்மைகள் யாவும் அழிப்பராம்
மூடக் கட்டுக்கள் யாவும் தகர்ப்பராம்''

என்று முழக்கமிட்டுப்பாடுகின்றார்.

பெண் விடுதலை

பெண் விடுதலைக்காக ஆவேசக்குரல் எழுப்புகிறார். 'பெண்ணுக்கு விடுதலை நீர் இல்லை யென்றால், பின்னிந்த உலகிலே வாழ்க்கையில்லை' என்று ஒரு அபாய அறிவிப்பையே வெளியிடுகின்றார். ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்ள வேண்டும். ஆணுக்குப் பெண் அடிமை என்பது அறிவற்றது. மக்கள், ஆண்கள், பெண்கள் உட்பட அனைவரும் சரிசமமாக இருக்க வேண்டும் என்பதை ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே என்ற தொடரால் குறிப்பிடுகின்றார். மேலும்,

''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி''

என்ற வரிகளின் மூலம் ஆண் பெண் சரிநிகர் என்பதை உணர்த்துகின்றார்.

நமது நாட்டுப் பெண்கள் எல்லா வகையிலும் விடுதலைபெற்று, ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமமாக வாழவேண்டும் என்பதை பாரதியார் வலியுறுத்துகின்றார். பெண்களுக்கு விடுதலை கொடுப்பதில் முக்கியமான ஆரம்பப்படிகள் என்ற தலைப்பில் பாரதியார் பத்துக் கொள்கைகளை வரையறுத்துக் குறிப்பிடுகின்றார். அவை,

1. பெண்கள் ருதுவாகும் முன்பு விவாகம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தக் கூடாது.
2. அவர்களுக்கு இ'டமில்லாத புரு'னை விவாகம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தக் கூடாது.
3. விவாகம் செய்து கொண்ட பிறகு, அவள் புரு'னை விட்டு நீங்க இடம் கொடுக்க வேண்டும். அதன் பொருட்டு அவளை அவமானப் படுத்தக்கூடாது.
4. பிதுர்ரார்ஜிதத்தில் பெண் குழந்தைகளுக்குச் சமபாகம் கொடுக்க வெண்டும்.
5. புரு'ன் இறந்த பின்பு ஸ்த்ரீ மறுவிவாகம் செய்து கொள்வதைத் தடுக்கக் கூடாது.

ISBN 978-93-5288-634-0

6. விவாகமே இல்லாமல், தனியாக இருந்து வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றால் கௌரவமாக ஜீவிக்க விரும்பும் ஸ்திரீகளை யதேச்சையான தொழில் செய்து ஜீவிக்க இடம் கொடுக்க வேண்டும்.
7. பெண்கள் கணவனைத் தவிர வேறு புருஷனுடன் பேசக்கூடாதென்றும் பழகக் கூடாதென்றும் பயத்தாலும், பொறாமையாலும் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனையை ஒழித்துவிட வேண்டும்.
8. பெண்களுக்கு ஆண்களைப் போலவே, உயர்தரக் கல்வியின் எல்லாக் கிளைகளிலும் பழக்கம் ஏற்படுத்த வேண்டும்.
9. தகுதியுடன் அவர்கள் அரசாட்சியில் எவ்வித உத்தியோகம் பெற விரும்பினாலும், அதைச் சட்டம் தடுக்கக் கூடாது.
10. தமிழர்க்கும் சுயராஜ்யம் கிடைத்தால் அப்போது பெண்களுக்கு இராஜாங்க உரிமைகளிலே அவசியம் பங்கு கொடுக்க வேண்டும்.

இவ்வாறு பெண்களுக்குச் சமுதாயத்தில் எத்தகைய உயர்ந்த சிறந்த, உரிமை வாய்ந்த இடம் அளிக்கவேண்டும் என்பதில் பாரதியார் கொண்டிருந்த துடிப்புணர்ச்சி மேற்குறிப்பிட்ட கொள்கைகளின் மூலம் தெளிவாகப் புலனாகின்றது. மேலும்

"பெண் விடுதலை வேண்டும்
பெரிய கடவுள் காக்க வேண்டும்"

என்பதிலிருந்து நாம் நன்கு உணர்ந்து கொள்ள முடிகின்றது.

விடுதலை என்பது வெறும் ஆட்சி புரியும் அதிகார மாற்றம் என்பது மட்டுமல்ல, அந்தச் சொல்லுக்கு பாரதி ஒரு புதிய இலக்கணத்தையே படைத்துள்ளார். இதனை,

"பொய்மை தீர மெய்மை நேர
வருத்தம் அழிய வறுமை ஒழிய
வேண்டுமடி யெப்போதும் விடுதலை"

என்று பாரதி தமது கவிதைகளின் மூலம் முழக்கம் எழுப்புவதில் இருந்தே இதனை நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

வீரப்பெண்கள்

"வீரப்பெண்கள்தாம் நாட்டிற்கு உழைக்க முடியும். உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேறவேண்டும். பற்பல நூல் வகைகளை கற்க வேண்டும். பெரும்புகழ் படைத்த நாற்றிசை நாடுகள் யாவற்றிற்கும் சென்று அங்குள்ள புதுமைகளை இங்கு கொண்டு வர வேண்டும். இந்த நாடுயற உழைத்தல் வேண்டும்" என்று பலவாறு விரும்புகின்றார். இதை,

"உலக வாழ்க்கையி னுட்பங்கள் தேறவும்....
தேச மோங்க உழைத்திடல் வேண்டுமாம்"

என்ற பாடல் வரிகளின் மூலம் பாடுகின்றார். மேலும், புதுமைப்பெண்கள் செம்மைமாதர்களாக, சீருடனும் சிறப்புடனும் விளங்குவார்கள் என்பதை,

"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்

ISBN 978-93-5288-634-0

நிலத்தில் யார்க்கு மஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானம் செருக்கு மிருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்''
என்ற பாடல் வரிகளின் மூலம் குறிப்பிடுகின்றார்.

ஆண்களைப் போன்றே பெண்களும் வீரத்துடன் திகழ வேண்டும். அடிமைத் தனத்தை ஒழிக்க வேண்டும் என்பதை,

''விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பாராம்''
என்ற பாடல் வரிகளின் மூலம் அறிய முடிகின்றது.

முடிவுரை:

காலத்தால் அழியாத கவிதைகளைப் படைத்து மக்களுக்கு எழுச்சியும், உணர்ச்சியும் ஊட்டிய கவிஞர் பாரதியார். இந்திய மக்களின் விடுதலைக்காக மட்டுமல்லாது மனித குலம் அனைத்தின் விடுதலைகளையும் பாடிய பெருமைக்குரியவர். பெண் விடுதலையைப் பாடிய முதல் கவிஞரும் இவரே ஆவார். உலகம் அறியாமை எனும், இருளில் உழன்று, அல்லற்படாமல் அறிவொளிபெற்று திகழ வேண்டுமானால் பெண்களின் அறிவை வளர்க்க வேண்டும் என்றும் பெண்களுக்கு கல்வி வேண்டும், உரிமை வேண்டும், விடுதலை வேண்டும் என்றும் இல்லறத்திலும், பொது வாழ்விலும் பெண்களின் உரிமையும் கடமையும் இணைந்து இயங்குதல் வேண்டும் என்றெல்லாம் அயராது தொடர்ந்து முழக்கமிட்டவர். அவர் கவிதைகள் உள்ளளவும் அவரின் புகழ் நிலைத்திருக்கும் என்பது திண்ணம்.